# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேணுகோபால் | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : அலமேலுமங்காபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.02.2025**

பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 12 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்களிலும் மற்ற சொத்துக்களிலும் 3 ல் 1 பாகம் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 11 ல் **"வழக்கு சொத்து மட்டும் இன்றுவரை கூட்டு அனுபவத்தில் இருப்பது உண்மை"** என கூறியுள்ளது உண்மையா என்றால் இந்த சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்திலேயே வழக்கு குறித்து இரு வேறு கட்சியை எடுத்துள்ளேன் என்றால் அந்த சொத்து பாகம் பிரிக்காமல் கூட்டு அனுபவத்தில் உள்ளது.

2. 06.03.2002 ம் தேதியிட்ட விக்கிரய பத்திரத்தில் பாப்பம்மாள், நாகராஜ், நான் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் நாங்கள் கிரையம் செய்யவில்லை. அது அடமான ஆவணமாக இருக்கும். எனது சகோதரர் 6 ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதியிடம் இருந்து ரூ.5000/- நாகராஜ் கடனாக பெற்றதாக கூறியுள்ளதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அந்த அடமான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 06.03.2002 ம் தேதியிட்ட ஆவணம் அடமானம் இல்லை என்பதையும் அது கிரைய ஆவணம் என்பதையும் நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் ஞாபகமில்லை. அந்த விவரத்தை எப்போது தெரிந்து கொண்டேன் என்பது ஞாபகமில்லையா என்றால் ஆமாம்.

3. 06.03.2002 ம் தேதியிட்ட ஆவணம் அடமானம் இல்லை என்பதையும் அது கிரைய ஆவணம் என்பதை நான் பாபு நாயுடுக்கு சொன்னேோ என்றால் சொன்னேன். நான் வாதிக்கு எப்போது, எத்தனை வருடங்களுக்கு முன்பு சொன்னேன் என்றால் ஞாபகமில்லை. 06.03.2002 ம் தேதியிட்ட ஆவணம் அடமானம் இல்லை என்பதையும் அது கிரைய ஆவணம் என்பதை பொறுத்து நான் எதுவும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கில் பதிலுரை தாக்கல் செய்தேனா என்றால் ஞாபகமில்லை. நான் எதுவும் பதில் போடவில்லை.

4. நான் இந்த வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்போகிறேனா என்றால் தெரியவில்லை. 17 ம் பிரதிவாதி மோகனின் தாத்தா முனுசாமி நாயுடு 09.11.1967 ம் பத்திரத்தில் புல எண்.23/3A, புதிய புல எண்.23/3A2, மொத்த விஸ்தீரணம் 61 செண்ட்டில் 41 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அவர்தான் வாங்கியுள்ளார். 06.03.2002 ம் தேதியிட்ட பத்திரத்தின் மூலம் ராதாகிருஷ்ணன் வழக்கு புல எண்ணில் 21 செண்ட் கிரையம் பெற்றார் என்றால் கிரையம் பெறவில்லை. அடமானம்தான் பெற்றார். வழக்கு சொத்தை ராதாகிருஷ்ணன் வாரிசுகளான மோகன் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம்.

5. நான் அனுபவிப்பதாக சொல்வதில் பட்டா, சிட்டா, அடங்கல் எங்கள் பெயரில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரை கேட்டால் தெரியும். தற்போதும் மோகன்தான் உழுது அறுவடை செய்துள்ளார் என்றால் நான்தான் உழுதுள்ளேன். இன்றைய தேதி வரை நான் எழுதி கொடுத்தது அடமானம்தான் எழுதி கொடுத்தேன் என்றும் கிரையம் எழுதி கொடுக்கவில்லை என்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது குறித்து ஆலோசணை செய்ய வேண்டும். எனக்கோ வாதிக்கோ வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)